ISSN 2773-6865

# அரிந்திரன்

சிறுவர் சஞ்சிகை

இதழ்-04
மார்ச் - ஏப்ரல்
2021

20/-








குட்டி
இலவச
நூலகம்

சாதனை வீரர்கள்
எங்கும் இருக்கிறார்கள்

அமெரிக்கத் துணை ஜனாதிபதி
கமலா ஹாரீஸ்
எழுதிய சிறுவர் புத்தகம்




அரிந்திரு அறிவே அருந்திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அனுப்ப வேண்டிய முகவரி**
அறிந்திரன், கணபதி,
இணுவில் தெற்கு, இணுவில்.
மின்னஞ்சல் முகவரி
arinthiran20@gmail.com


## எழுதுங்கள் வெல்லுங்கள்...

கட்டுரையை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, பாடசாலை பெயர், தரம், பெற்றோர் பெயர், தொலைபேசி இலக்கம் என்பனவற்றைக் குறிப்பிட மறக்க வேண்டாம்.

### அன்புச் சிறார்களே!

மேலே உள்ள படத்தைப் பார்க்கும்போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது? என்றதை ஒரு குட்டிக் கட்டுரையாக எழுதித் தபால் மூலமோ அல்லது உங்கள் பெற்றோர்களின் மின்னஞ்சல் மூலமோ அனுப்பி வைக்கலாம். மிகவும் சிறந்த, பயனுள்ள கருத்தை எழுதுபவர்களுள் மூவருக்குத் தலா ரூபா.500 பெறுமதியுள்ள புத்தகங்கள் அனுப்பி வைக்கப்படும்.

- அறிவன் அண்ணா



### அன்றும் இன்றும்

அன்றைய நாட்டில் எங்கும் சிற்றூர்கள். சிறு குடிசைகள். பிள்ளைகள் ஓடிப்பிடித்து விளையாடுவர். மரம் உருட்டிச் சக்கரம் கண்டு பிடித்த பின்னர் மாட்டு வண்டியே ஊர்த்தியானது. குதிரை வண்டியையும் உண்டாக்கினர். பயணத்துக்கு வேறு ஊர்திகள் இல்லை.

பிள்ளைகள் விளையாட நவீன விளையாட்டுப் பொருட்கள் எதுவும் கிடையாது. அவர்கள் அப்போது விளையாடும் விளையாட்டுகளில் இதுவும் ஒன்று. ஒருவர் முற்றத்தில் தென்னை மட்டையைப் பிடித்தபடி விழாமல் இருப்பர். மற்றவர் அதனை இழுத்துச் செல்வர். இவ்வாறு விளையாடிப் பொழுதைப் போக்குவர்.

இன்றை நாட்களில் மிதிவண்டி, இருசக்கர வண்டி, மகிழுந்து, முச்சக்கர வண்டி, றெயில் வண்டி, ஆகாய விமானம் என்று பல வந்துவிட்டன. விரைவாகத் தொலைவிடம் சென்று வரும் வாய்ப்பு உண்டு.

அன்றைய ஊர்க்காட்சியை இந்தச் சித்திரம் தெளிவாகக் காட்டுகிறது.

**வி. கேசிகன்**
தரம் 5A.

அறிந்திரன் இதழ் 3 இல் வெளியாகிய எழுதுங்கள் வெல்லுங்கள் என்ற பகுதியில் ஒரு படத்தைப் பிரசுரித்து அது பற்றி உங்கள் மனதில் தோன்றுவதை எழுதி அனுப்பும்படி கேட்டிருந்தோம்.

அதற்கு திருகோணமலை, கண்டிவீதி, மட்டிக் கழி, கிருஷ்ணபுரம் இல 44/18 இல் இருந்து அறிந்திரன் வாசகன் செல்வன் வி. கேசிகன் பின்வருமாறு எழுதி அனுப்பி இருக்கிறார். அவர் இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ் வரர் இந்துக் கல்லூரி, திருமலை என்ற பாடசாலையில் தரம் 5 A இல் படிக்கிறார். இவரது பெற்றோர் பெயர் விஷ்ணுகுமார் – தமிழரசி. அவருக்கான பரிசுப் புத்தகங்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும். அறிந்திரனின் வாழ்த்துகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்திரன்

அறிந்திரு; அதுவே அருந்திரு

இதழ் 4 மாத சஞ்சிகை
மார்ச் – ஏப்ரல் 2021

ஆசிரியர் அறிவன் அண்ணா

**முகவரி**
அறிந்திரன், கணபதி,
இணுவில் தெற்கு, இணுவில் (P.O)
**தொலைபேசி : 076 028 8853**
மின்னஞ்சல் : arinthiran20@gmail.com

இணுவில், கணபதி சர்வானந்தா அவர்களால் எவகிறீன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




**என் அருமைச் சிறார்களே!**

**வணக்கம்.**

இதுவரை அறிந்திரன் மூன்று இதழ்கள் வெளிவந்துள்ளன. உங்களில் பலர் அவற்றை வாசித்திருக்கிறீர்கள். அதற்கு அடையாளமாகப் பல ஆக்கங்களை அனுப்பி வைத்திருக்கிறீர்கள். பலர் தொடர்பு கொண்டு அவை பற்றிப் பேசியிருக் கிறீர்கள். உங்களது அக்கறையும் ஆர்வமும் மகிழ்ச்சியைத் தருகிறது.

கடந்த வாரம் துவிச்சக்கர வண்டியில் சென்ற என்னை ஒருவர் வழிமறித்தார். அவர் உங்களில் ஒருவராகத்தான் இருப்பார் என நினைக்கிறேன். "அடுத்த அறிந்திரன் எப்ப வரும்?" என ஆர்வத்தோடு விசாரித்தார். "நான் ஆக்கங்களை அனுப்பினால் போடுவீர்களா?" என்றும் மிடுக்கோடு கேட்டார்.

"என்னைத் தெரியுமா?" என்று கேட்டேன். ஆம் என்றார். அவருடைய பாடசாலையில் புத்தகத்தைக் கொண்டு சென்று விற்றபோது என்னைக் கண்டதாகச் சொன்னார். போய்விட்டார்.

இதுபோன்று நீங்கள் கொண்டிருக்கும் ஆர்வமும், உங்கள் அறிமுகமும் தான் நான் தொடர்ந்து இயங்கக் காரணமாக இருக்கிறது. எனவே உங்கள் ஆர்வமே என்னை உயிர்ப்போடு இயக்கும் அருமருந்து என்பதை மறக்க வேண்டாம்.

நன்றி
**அறிவன் அண்ணா.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பம்பரம் பார் ...

மோகன் அண்ணா

பம்பரம் பார் பம்பரம் பார்
சுற்றிச் சுற்றி வருகிறதே
சுழன்று சுழன்று வருகிறதே
கண்ணைக் கவரும் வர்ணம்
- கொண்ட
காற்றில் ஆடும் பம்பரம் பார்
பம்பரம் பார் பம்பரம் பார்

தாத்தா வந்து பம்பரம் பார்
பாட்டி வந்து பம்பரம் பார்
அப்பா வந்து பம்பரம் பார்
அம்மா வந்து பம்பரம் பார்
பம்பரம் பார் பம்பரம் பார்

அக்கா வந்து பம்பரம் பார்
அண்ணா வந்து பம்பரம் பார்
குட்டித் தம்பி நீயும் வந்து
குறும்புப் பையன் போலச் சுற்றும்
பம்பரம் பார் பம்பரம் பார்

வானவில்லின் வர்ணம் கொண்டு
வட்டமாகச் சுற்றுறதே
சீமையிலே செய்தது
சித்தி வாங்கித் தந்தது
சிங்காரி போல் ஆடுகின்ற
பம்பரம் பார் பம்பரம் பார் !!
பம்பரம் பார் பம்பரம் பார்!!

# ஐயா! கொய்யா!



ஐயா கொய்யா விற்கிறார்
அரைக் கிலோ ரூபாய் இருபதாம்
கையில் எடுத்தால் வாய் ஊறும்
கடித்துத் தின்றால் அமுதாகும்
ஏழை எளியோர் தின்பதற்கு
இயற்கை கொடுத்த கொடையாகும்
உழைக்கும் மக்கள் வாங்குகிறார்
உவப்புடன் பசியைப் போக்குகிறார்

கூறு கட்டி விற்கிறார்
கூடையில் எடுத்துத் தருகின்றார்
ஏறும் வெய்யில் நேரத்தில்
எடுத்துத் தின்னச் சுகமாகும்

சிவப்பு கொய்யா கற்கண்டு
சீனிக் கொய்யா நெய் லட்டு
உவப்பாய் வாங்கி உண்ணுங்கள்
உள்ளம் மகிழ்ந்தேன் செல்லுங்கள்

பண்ணைத் தோட்டப் பழமாகும்
பழமும் காயும் தேனாகும்
அன்புக் குழந்தைகள் உண்பதற்கு
அப்பா வாங்கிச் செல்கின்றார்

நன்றி - தினமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வயது – 4 வாசித்தது 1000

## டாலியா மேரி அரானா சாதனை

அவளுக்கு வயது 4. அப்போது அவள் 1000 புத்தகங்களை வாசித்து முடித்திருந்தாள். அவள் பெயர் டாலியா மேரி அரானா. அதற்காக அவள் பெற்ற பரிசு என்ன தெரியுமா? உலகின் மிகப் பெரிய கொங்கிரஸ் நூலகத்தில் (லைப்ரேரி ஓஃப் கொங்கிரஸ் - Library of Congress) இல் நூலகராக ஒரு நாள் கடமையாற்றும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டாள். அதுவே அவள் பெற்ற பரிசு. அதுவே அவளுக்குக் கிடைத்த கௌரவம்.

இது இற்றைக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், 2016 இல் நடைபெற்றது. நான்கு வயதில் 1000 புத்தகங்களை வாசித்து முடிப்பது என்பது சாதாரண விடயம் அல்ல. அதனால் சரித்திரம் படைத்த குழந்தை என்று அமெரிக்கா அவளைக் கொண்டாடியது. அமெரிக்காவிலுள்ள பத்திரிகைகள் அனைத்தும் அவள் பெற்ற கௌரவத்தைப் பாராட்டின. அதற்கு முக்கியத்துவம் கொடுத்துச் செய்தியினைப் பிரசுரித்திருந்தன. தொலைக் காட்சிகளில் அவளைப் பற்றிய நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின. அவளைப் பாராட்டின.

டாலியா அரானாவின் தந்தை ஓர் அமெரிக்கர். தாயார் ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்தவர். சரியாக அவள் பிறந்து பதினொரு மாதங்களானபோது அவள் தாயார் அவளுக்கு "அனாவின் பெரிய மபின்கேக்" (Anna's Big Muffin) என்ற புத்தகத்தை வாங்கிக் கொடுத்தார். அன்று தொடங்கிய புத்தகத்தின் மீதான ஆர்வம் தொடர்ந்தது என்று சொல்லுகிறாள் அரானா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்காவில் ஆரம்பப் பாட சாலையில் படிக்கும் சிறார்களுக்கென ஒரு நிகழ்சி நடைபெறும். அதனை 1000 புத்தகங்கள் நிறுவனம் (1000 புக்ஸ் பவுண்டேசன் - 1000 Books foundation) என்ற அமைப்பு நடத்தும். அது குழந்தைகள் புத்தகம் வாசிப்பதை ஊக்கு விக்கின்ற ஒரு நிகழ்சியாகும். சிறுவர் பாடசாலைகளில் கல்வி கற்கும் சிறுவர்கள் அதில் பங்கேற்பர். ஒரு குறிப்பிட்ட வயதில் 1000 புத்தகங்களைப் படித்து முடித்திருக்க வேண்டும். அதுவே போட்டியில் கலந்து கொள்வதற்குரிய தகைமையாகும்.

அதன்படி பெற்றார் அல்லது பாதுகாவலர் தமது குழந்தைகள் படித்து முடித்த 1000 புத்தகங்களை அட்டவணைப் படுத்தி "1000 புத்தகங்கள் நிறுவனம்" (1000 Books foundation) என்ற அமைப்புக்கு அனுப்ப வேண்டும். அவர்கள் அதனைப் பரிசீலித்துத் தேர்வு செய்து அதற்குத் தகுதியுடையவர்களுக்கு அந்தக் கௌரவத்தைக் கொடுப்பார்கள். அதன்படி டாலியா மேரி அரானா அந்தப் போட்டியில் பங்கு பற்றுவதற்கான தகுதியைப் பெற்றிருந்தாள். அவள் தாயாரான ஹலீமா அரானா அந்தப் போட்டிக்கான விண்ணப்பத்தை அனுப்பி வைத்தார். அதிலே வெற்றி பெற்று ஒரு நாள் நூலகர் என்ற வாய்ப்பைப் பெற்ற போது அந்த நூலகத்தில் சிறுவர்களுக் கான பகுதி எப்படி அமைய வேண்டும்? அதில் என்னென்ன மாற்றங்களைச் செய்ய வேண்டும்? என்று அந்த நூலக நிர்வாகத்துக்குப் பல ஆலோசனைகளை மேரி அரானா வழங்கியிருக்கிறாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகமும் நாய்க்குட்டியும்

ஒரு வீட்டில் நாய்க்குட்டி ஒன்றை வளர்த்து வந்தனர். அந்த வீட்டுக்கு உணவு தேடி அவ்வப்போது ஒரு காகம் வந்து போவது வழக்கம். அந்தக் காகமும் நாய்க்குட்டியும் நண்பர்களாயினர்.

ஒரு நாள் காகம் வந்து அங்குள்ள மரத்தில் மிகவும் கவலையுடன் அமர்ந்து இருந்தது. அதைக் கண்ட நாய்க்குட்டி காகத்திடம் சென்று "என்ன காக்கையாரே? ஏன் ஒன்றும் பேசாமல் வருத்தமாக இருக்கிறீர் ?"என்று கேட்டது. ஒன்றுமில்லை. இந்த மனிதர்கள் மற்றப் பறவைகளின்மேல் அன்பு கொள்வதைப் போல் எம்மிடம் நடந்து கொள்வதில்லை. எங்களைக் கண்டால் "சூ.. சூ.." என்று கல்லால் எறிந்து விரட்டுகிறார்கள். ஏன் என்று தெரியவில்லை. அது பற்றி யோசித்தேன். கவலை வந்து விட்டது. என்று காகம் பதிலளித்தது.



"அதற்குக் காரணம் உங்கள் தீய குணங்கள்தான் அவற்றை நீங்கள் இல்லாது செய்தால் உங்களையும் அன்பாக நடத்துவார்கள்." என்றது நாய்க்குட்டி. "எங்களிடம் அப்படியென்ன தீய குணங்கள் உள்ளன? கடமை, சுத்தம் இப்படிப் பல நல்ல குணங்களில் நாங்கள்தான் சிறந்தவர்கள் என்று சொல்லுகிறார்களே." என்று சொன்னது காகம். "உண்மைதான்" என்றது நாய்க் குட்டி. பகிர்ந்துண்ணும் பண்பைக் கற்றுத் தந்ததும் நாங்கள்தான் என்று பெருமையோடு சொன்னது காகம் ஆம் அதுவும் உண்மைதான் என்று மறுபடியும் சொன்னது நாய்க்குட்டி. இப்படி நல்ல குணங்கள் எம்மிடம் இருந்தும் மற்றப் பறவைகளுக்கு உள்ள மதிப்பு எங்களுக்கு இல்லையே. குயில் கூவும்போது அதன் இனிமையை இரசிக்கிறார்கள். மயிலாடும் போது அதை இரசித்துப் பாராட்டுகிறார்கள். கிளியை வீட்டில் வளர்த்துப் பேசக் கற்றுக் கொடுக்கிறார்கள். ஆனால் இவ்வளவு நல்ல குணங்கள் இருந்தும் எம்மைக் கண்டவுடன் கத்திக் கலைக்கிறார்களே. ஏன்?" என்று கேட்டதுகாகம். "ஏன்என்றுநான்சொல்லுகிறேன்கேள். உங்களிடம்பலநல்லகுணங்கள் இருந்தும் உங்களிடம் உள்ள தீய குணங்கள் தான் மனிதர்களுக்கு உங்கள் மீது வெறுப்பைத் தூண்டுகின்றன." என்றது நாய்க் குட்டி. "அப்படி என்ன தீய குணங்கள் எம்மிடம் உண்டு?" என்று காகம் கேட்டது. "திருடுதல், ஏமாற்றுதல்" என்று சொன்னது நாய்க்குட்டி. காகம் வெட்கித் தலை குனிந்தது.

**ஒருவரிடம் எவ்வளவு நல்ல பண்புகள் இருந்தாலும் அவரிடம் காணப்படும் ஒரு தீய செயல்கள் அவரிடமுள்ள அந்த நல்ல பண்புகளையும் மறைத்துவிடும். தீய குணங்களே முன்னிற்கும். எனவே அதனையும் இனங்கண்டு தவிர்த்துக் கொண்டால் அனைவரினதும் அன்புக்குப் பாத்திரமாகலாம்.**

- அ.விஷாளி
தரம் 6, யாழ். இந்துமகளிர் கல்லூரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டி ஓவியர்கள்





**அ. ருஷானி**
தரம் 7, மு/ பாண்டியன் குளம் மகாவித்தியாலயம்



**அ. ஆரூரன்**
யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி



**ஈ. ஆருடன்**
இல.64, கோவில் வாசல் இணுவில் மேற்கு, யாழ்ப்பாணம்.



**கௌ. அஸ்விகா**
தரம் 1, கெற்பேலி, மிருசுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கத் துணை ஜனாதிபதி

**கமலா ஹாரீஸ் உங்களுக்காக எழுதி இருக்கும் அந்தப் புத்தகத்தில் நேரடியாக உங்களோடு அவர் பேசுகிறார். உங்களை உற்சாகப்படுத்துகிறார். அந்தப் புத்தகத்தில் மகிழ்ச்சிகரமான படங்கள் நிறைந்து காணப்படுகின்றன. அதன் ஆரம்பப் பக்கம் தொடக்கம் இறுதிவரை அவர் தனது அனுபவங்களுக்கூடாகவே உங்களைக் கூட்டிச் செல்லுகிறார். தனது அனுபவங்களையே உங்களுக்குப் பாடமாகச் சொல்லுகிறார். உலகத்தை சிறப்புடையதாக்குகின்ற வலிமை உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருப்பதாகவே அவர் நம்புகிறார். அந்தப் புத்தகத்தை வாசிக்கின்ற நீங்கள் ஒவ்வொவரும் "சுப்பர் ஹீரோஸ்" பற்றிய மெய்யுணர்வைப் போர்த்திக் கொள்ளுவீர்கள் என்றும் அவர் எதிர்பார்க்கிறார்.**

# சாதனை வீரர்கள் எங்கும் இருக்கிறார்கள்



அமெரிக்கத் துணைஜனாதிபதி கமலா ஹாரீஸ் " சுப்பர் ஹீரோஸ் ஆர் எவ்றிவெயர்" (Super Heroes are Everywhere) என்ற புத்தகத்தை உங்களுக்காக எழுதியுள்ளார். அவர் தென் இந்தியாவிலுள்ள தமிழ் நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஓர் சாதாரண நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர். அடிப் படை வசதிகளோடு வளர்ந்தவர்.

இன்று அவர் அமெரிக்க வல்லரசில் மதிப்புமிக்க துணை ஜனாதிபதியாகப் பதவி வகிக்கிறார். அவர் ஒரு சட்டத்தரணி. அவர் ஓர் அரசில்வாதி. அது மட்டுமல்ல அவர் ஓர் எழுத்தாளரும் ஆவர். அவர் குழந்தைகளின்மேல் அதிக பிரியம் உள்ளவர். அதனால் குழந்தை களுக்கெனத் தனியாகப் புத்தகங்களை எழுதி வெளியிட்டிருக்கிறார். அதில் " சுப்பர் ஹீரோஸ் ஆர் எவ்றிவெயர்" (Super Heroes are Everywhere) என்ற புத்தகம் அதிகம் பேசப்படுகிறது. அதாவது சிறப்பு மிக்க மனிதர்கள் சாதனைவீரர்களாக எங்கும் இருக்கிறார்கள், மதிக்கப் படுகிறார்கள் அல்லது வாழ்கிறார்கள் என்று சொல்கிறார்.

அவர் சிறுமியாக இருந்த போது சிறப்பு மிக்க சாதனையாளர்களாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தவர்கள் பற்றி அறிந்திருக்கிறார். அவர்கள் மீது அன்பும் ஈடுபாடும் கொண்டவராகக் காணப்பட்டார். அவர்கள் தொடர்பில் ஏற்பட்ட அனுபவமே அவருக்கு இந்தப் புத்தகத்தை எழுதத் தூண்டியதாம். அவர் அனுபவத்தின்படி 'இது போன்ற சிறப்புடைய மனிதர்கள் இந்த இடத்தில் இப்படித்தான் இருப்பார்கள்' என்று இல்லை. அவர்கள் எங்கும் இருக்கிறார்கள் என்பதைக் கமலா ஹாரீஸ் கண்டறிந்தார்.

அவர் குடும்பத்தில்,அவரது நட்பு வட்டத்தில், அவர் வசிக்கின்ற தெருவில், நடைபாதையில், பூங்காவில், கடைத் தெருவில் என்று எல்லா இடங்களிலும் சிறப்புடைய மனிதர்கள் இருக்கிறார்கள் என்று கண்டபோது கமலா அவர்கள்பால் ஈர்க்கப்பட்டார்.

சாதனை வீரராக வருவதற்கு ஒருவர் செய்ய வேண்டியது எல்லாம் "தனது சமூகத்தினரிடையே சிறப்புடைய வனாகத் தன்னைத் தரம் பேணிக் காக்க வேண்டும்" என்பதே. அவள் பார்த்த சாதனை வீரர்கள்கள் எல்லோரும் அதையே அவருக்கு உணர்த்தினார்கள்.

கமலா ஹாரீஸ் குழந்தை களுக்காக எழுதி இருக்கும் அந்தப் புத்தகம் குழந்தைகளோடு நேரடியாகப் பேசுவதாகப் படைக்கப்பட்டிருக்கிறது. குழந்தைகளை உற்சாகப்படுத்துவதாகக் காணப்படும் அந்தப் புத்தகத்தில் மகிழ்ச்சி கரமான படங்கள் நிறைந்து காணப் படுகின்றனவாம். புத்தகத்தின் ஆரம் பத்தில் இருந்து இறுதிவரை அவர் தனது அனுபவங்களுக் கூடாகவே குழந்தை களைக் கூட்டிச் செல்லுகிறார். தனது அனுபவங்களையே குழந்தைகளுக்குப் பாடமாகச் சொல்லுகிறார். உலகத்தை சிறப்புடைய தாக்குகின்ற வலிமை ஒவ்வொருவருக்குள்ளும் இருப்பதாகவே அவர் நம்புகிறார். அந்தப் புத்தகத்தை வாசிக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் சுப்பர் ஹீரோஸ் பற்றிய மெய்யுணர்வைப் போர்த்திக் கொள்வர் என்றும் அவர் எதிர்பார்க்கிறார்.

கமலா ஹாரீஸ் தேடுகின்ற அத்தகைய அதிசக்திவாய்ந்த மனிதர்கள் "சுப்பர்ஹீரோக்கள்" உங்களுக்குப் பக்கத் திலும் இருக்கலாம். உங்களைச் சுற்றி இருப்பவர்களில் யாராவது ஒருவாரகவும் இருக்கலாம். ஏன்? அந்த சிறப்பு மனிதர் எனச் சொல்லப்படும் "சுப்ப ஹீரோ" நீங்களாகவும் இருக்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரி

– உலகன்

புனிதனுக்கு ஒன்பது வயது. நாலாம் ஆண்டு படிக்கிறான். புனிதனை அப்பாதான் ஒவ்வொரு நாளும் பள்ளிக்குக் கூட்டிப் போவார். அப்பாவிடம் ஒரு சிறிய உந்துருளி இருக்கிறது. அதில் தான் போய் வருவார்கள்.

'உந்துருளி' என்றால் என்ன? தெரியுந் தானே உங்களுக்கு? ஆமாம், மோட்டார் சைக்கிளுக்குத் தமிழ்ப் பெயர்தான் உந்துருளி.

உந்துருளியில் போவதென்றால் புனிதனுக்கு வலு விருப்பம். ஆனால், அதற்கு 'ஹெல்மெற்' அணிய வேண்டுமே! புனிதனுக்கும் ஒரு சிறிய 'ஹெல்மெற்' அப்பா வாங்கிக் கொடுத்திருந்தார்.

சரி, 'ஹெல்மெற்'றுக்குத் தமிழ் என்ன? தலைக் கவசம்!

ஒரு நாள் பிற்பகல். பாடசாலை முடிந்தது. புனிதனும் அப்பாவும் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தார்கள். வழமை போல் புனிதன் பின்னால் இருந்தான். முதுகில் புத்தகப்பை. அப்பாவின் தோளை இறுகப் பிடித் திருந்தான். அப்பா ஒரு போதும் உந்துருளியை அவசரப்பட்டுச் செலுத்துவ தில்லை. ஓர் இடத்தில தெருக்கரையோடு ஒரு சைக்கிள் நின்றது. மூன்று சில்லுச் சைக்கிள் கையால் சுற்றி ஓட வைக்கும் சைக்கிள்.
கண்டிருக்கிறீர்களா?
காலால் மிதித்து ஓட முடியாதவர்கள் பயன்படுத்தும் சைக்கிள்.

அப்பா உந்துருளி வேகத்தைக் குறைத்தார். மூன்று சில்லுச் சைக்கிளைத் தாண்டி நிறுத்தினார்.

"ஏன் அப்பா?" என்று கேட்டான், புனிதன்.
"ஒருக்கால் இறங்குங்கோ," என்றார் அப்பா.

புனிதன் இறங்கினான். அப்பாவும் இறங்கினார். உந்துருளியைத் தள்ளி மதிற் கரையோடு நிறுத்தினார். பிறகு,

"அங்கே பாருங்கோ," என்று பின்னால் காட்டினார்.
புனிதன் திரும்பிப் பார்த்தான். மூன்று சில்லுச் சைக்கிளில் வந்தவர், வயதான மனிதர், மெலிந்தவர். வெயிலில் களைத் திருந்தார்.

"அவர் ஏன் நிற்கிறார்?" என்று புனிதன் அப்பாவிடம் கேட்டான்.
"அவருடைய சைக்கிள் சங்கிலி கழன்று போச்சு," என்றார் அப்பா.



அப்போதுதான் புனிதன் கவனித் தான். சில்லைச் சுழல வைக்கும் சங்கிலி கழன்று இருந்தது. இருந்த படியே அதை மாட்ட அவரால் முடிய வில்லை. இறங்கி நின்று அந்தரப் பட்டுக் கொண்டிருந்தார். அப்பா மதிற் கரையோடு தேடி ஒரு மெல்லிய தடித் துண்டு எடுத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு அந்த மனிதரின் அருகில் போனார்.

"பொறுங்கோ, போடலாம்."

என்றார் அப்பா. அந்த மனிதர் விலகி நின்றார். அப்போது இன்னொரு உந்துருளி இவர்களைத் தாண்டிப் போனது.

"ஐயா, மூண்டு சில்லு வண்டிலை அடிச்சு விழுத்திப் போட்டார் போல!" பின்னால் இருந்தவன் பலத்துக் கிண்டலாய்ச் சொன்னான். இருவரும் உரக்கச் சிரித்ததும் கேட்டது.

அந்த உந்துருளி அப்பால் போயிற்று. அவர்களை ஒரு தரம் பார்த்தார் அப்பா. பிறகு திரும்பி, தடியால் சங்கிலியை மெல்ல இழுத்தார். சக்கரத்தில் மாட்ட முயன்றார். இரண்டு முறை வழுகியது. மூன்றாம் முறை மாட்டிவிட்டார்! சுழற்றிப் பார்க்க சரியாய்ச் சுழன்றது.

"இப்போ சரி. நீங்கள் ஏறுங்கோ, பெரியவரே..."

அப்பா அந்த மனிதரின் கையைப் பிடித்து ஏற உதவினார்.

"மிக்க நன்றி ஐயா," என்று அன்புடன் சொன்னார் அந்த மனிதர். மூன்று சில்லுச் சைக்கிள் மெல்ல நகர்ந்தது.

"கவனமாகப் போங்கோ," என்றார் அப்பா. புனிதனைத் தாண்டும்போது, அந்த மனிதர் மெல்லப் புன்னகைத்தார்.

அவர் போனதும் அப்பா வந்தார்.
"போவோமா?" என்றார் புனிதனிடம்.
"ஓம்," என்று ஏறப் போன புனிதன் சற்று நின்றான்.
மெல்ல "அப்பா?," என்றான்.
"என்ன?" என்று கேட்டார், அப்பா.

மற்ற உந்துருளியில் போனவர்கள் கூறியதைப் புனிதன் சொன்னான்.
கேட்டு விட்டு அப்பா சிரித்தார்.
பிறகு புனிதனிடம் சொன்னார்:
"சொல்கிறவர்கள் எதையும் சொல்வார்கள். நாங்கள் சரியாக நடந்தால் சரி."

---

# மரம் வளர்ப்போம்!
# மழை பெறுவோம்!!




*மரம் நிழல் தரும்*
*நல்ல காற்றைத் தரும்*
*மரங்களே பறவைகளின் வீடு*
*மரங்களால் மழை பொழியும்*
*மரத்தில் ஊஞ்சல் கட்டலாம்*
*மரங்களை நேசிப்போம்*
*எல்லோரும் மரம் நடுவோம்*
*எல்லோரும் பயன் பெறுவோம்*

**- றொ. சந்ததன்**
தரம்2. சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மாணவன் எப்படி இருக்க வேண்டும் ?



சோக்ரடீஸ் ஒரு கிரேக்க தத்துவஞானி. ஒரு நாள் அவரிடம் மாணவன் ஒருவன் வந்தான். ஐயா! மாணவன் என்பவன் எப்படி இருக்க வேண்டும்? என்று கேட்டான்.

அதற்கு சோக்ரடீஸ் "மாணவன் என்பவன் கொக்கைப்போல் இருக்க வேண்டும். கோழியைப்போல் இருக்க வேண்டும். உப்பைப்போல இருக்க வேண்டும். உன்னைப்போல இருக்க வேண்டும்." என்று பதிலளித்தார்.

மாணவனுக்கு ஒன்றும் புரியவில்லை. "கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள்" என்றான்.

"ஓடு மீன் ஓட உறுமீன் வரும் வரையும் காத்திருக்குமாம் கொக்கு" என்று சொல்லுவார்கள். கொக்கு ஒற்றைக் காலில் நீண்ட நேரம் பொறுமையாக நிற்கும். மீன்கள் வந்தவுடன் விரைந்து செயல்பட்டு அதனைப் பிடித்து உண்ணும். அதைப்போல மாணவர்கள் சரியான வாய்ப்புக் கிடைக்கும்போது அதைப் பயன்படுத்தி அரிய செயல்களைச் செய்ய வேண்டும்." என்றார்.

"கோழியைப்போல இருக்க வேண்டும் என்றீர்களே! ஏன்?" என்று மாணவன் கேட்டான். "ஏனெனில் அதாவது கோழி என்ன செய்யும்? குப்பையைக் கிளறும். ஆனால் அந்தக் குப்பைகளைப் போட்டு விட்டுத் தனக்குத் தேவையான உணவை மட்டும் எடுத்துக் கொள்ளும். அதுபோல மாணவர்கள் தாம் சந்திக்கும் தீமை களைத் தள்ளிவிட்டு நன்மைகளை மட்டும்எடுத்துக்கொள்ளவேண்டும்." என்று அவர் பதிலளித்தார்.

அடுத்து "உப்பைப் போல இருக்க வேண்டும் என்கிறீர்களே! ஏன்?" என்று மாணவன் கேட்டான்.

"ஆமாம்! உப்பை எந்த உணவோடு கலக்கினாலும் அது கரைந்து விடும். கலக்கிய உணவில் உப்பு கண்ணுக்குத் தெரியாது. ஆனால் அதன் சுவையை மட்டுமே உணர்ந்து "உணவில் உப்பு இருக்கிறது" என்று கூற முடியும். அதுபோல மாணவர்கள் எந்தத் துறையில் இறங்கினாலும் அதில் சிறப்பான தனித் தன்மையை வெளிப்படுத்தித் தனது மறைவிற்குப் பின்னும் அதை அவர் தான் செய்தார் என்று பிறர் கூறும்படியாக இருக்க வேண்டும்." என்றார்.

"எல்லாம் சரி உன்னைப் போல் இருக்க வேண்டும் என்றீர்களே! அதற்கு என்ன அர்த்தம்?" என்று கேட்டான்.

மாணவன் என்பவன் தனக்குள் எழக்கூடிய சந்தேகங்களை எந்தவித தயக்கமும் இல்லாமல் ஆசிரியரிடம் கேட்டுத் தெளிவு பெற வேண்டும் அதற் காகத்தான் உன்னைப்போல் இருக்க வேண்டும் எனச் சொன்னேன் என்று புன்னகைத்தார் சோக்ரடீஸ்.

**தே.நிக்ஷாந்தினி**
தரம் 7, பாண்டியன்குளம்
மகாவித்தியாலயம், முல்லைத்தீவு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குட்டி இலவச நூலகம்

குட்டி இலவச நூலகம் - லிட்டில் ப்ரீ லைப்பிரரி (Little Free Library) வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் தொடங்கப்பட்டது. அந்த இயக்கத்துக்கு வித்திட்டவர் திரு. ரொட் போல்ஒப் ஹட்சன் Mr. Todd Bolof Hudson. அது 2009 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இந்த நூலகத்தைத் தொடங்கிய வரான ஹட்சன் அதற்கான காரணத்தை இவ்வாறு சொல்லி இருக்கிறார். கேட்க மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறது. வீட்டுக் கொல்லைப் புறத்திலே அவர் உபயோகித்த பின் கைவிடப்பட்டுக் கிடந்த குருவிக் கூட்டைப் பார்த்த போது ஒரு திட்டம் அவர் மனதில் தோன்றியதாம். உடனடியாக அதனைத் துப்பரவாக்கினார். அதன் பழுதுபட்ட பாகங்களைத் திருத்தினார். அதனைத் தனது வீட்டு வாசலில் வைத்தார். தன்னிடம் இருந்த கதைப் புத்தகங்கள் சிலவற்றை அதனுள் வைத்தார். அதன் மேல் "குட்டி இலவச நூலகம்" என்று எழுதினார். "இதிலிருந்து ஒரு புத்தகத்தை எடுங்கள். உங்களிடம் உள்ள புத்தகம் ஒன்றினை இதில் வைத்துவிடுங்கள்" என்ற அறிவிப்பையும் சேர்த்து எழுதி வைத்தார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு பொழுதுபோக்காகத்தான் அவர் தொடங்கினார். இன்று ஒரு பாரிய செயல் திட்டமாக அது உருவெடுத்து இருக்கிறது. சிறியதாகத் தொடங்கப்பட்ட அந்த விடயம் காலப்போக்கில் ஒரு மாபெரும் இயக்கமாக மாறிவிட்டது. அதுவும் கொலனிகளாக உள்ள இடங்களில் மிகவும் பயனளிக்கிறதாகச் சொல்லப்படுகிறது. அமெரிக்காவில் குளிர் காலத்தில் பெரும்பாலும் மக்கள் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர். அப்படிப்பட்ட காலத்தில் இது போன்ற குட்டி இலவச நூலகங்கள் அவர்களுக்கு அதிக பயன் கொடுப்பதாகக் காணப்படுகிறது. குட்டி இலவச நூலகம் என்ற அந்த இயக்கம் பல நாடுகளுக்குப் பரவியிருக்கிறது. தனது இருப்பிடத்துக்கு அருகே ஒரு நூலகத்தை ஒருவர் தொடங்கலாம். அதற்குரிய மரத்தினால் செய்யப்பட்ட பெட்டியை அந்த நிறுவனத்திடமிருந்து பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். முற்றுப் பெறாத பெட்டி ஒன்று அமெரிக்க டொலர் 250 க்கும் முற்றாக்கிய வர்ணத்திலான பெட்டி ஒன்று அமெரிக்க டொலர் 1000 க்கும் லிட்டில் ப்ரீ லைப்பிரரி (Little Free Library) என்ற அந்த நிறுவனத்திடமிருந்து கிடைக்கிறது.

அமெரிக்காவில் உள்ள நகரங்களில் காணப்படும் பூங்கா, குடியிருப்புகள், வாகனத் தரிப்பிடங்கள், வைத்திய சாலைகள் போன்ற பொது இடங்களில் குட்டி இலவச நூலகம் பிரசித்தி பெற்ற ஒன்றாகக் காணப்படுகிறது.

நாங்களும் அது போன்று குட்டி இலவச நூலகங்களை எமது ஊர்களில் அமைப்பது பற்றியும் யோசிக்கலாமே!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டுக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாடும் கந்தனும்



ஒரு நாள் மாலை மாடுகள் கூட்டமாக வீடு திரும்பிக் கொண்டிருந்தன. அந்தக் கூட்டத்தில் சுமார் 100 மாடுகள் இருக்கும். அவற்றை மேய்க்கும் கந்தன் கையில் கழியுடன் மாடுகளை ஒழுங்கு படுத்தி விரட்டிக் கொண்டிருந்தான். அவனது தலையில் சிறு கூடை இருந்தது. அதில் அவன் மதிய உணவைக் கொண்டு வந்த பாத்திரங்கள் இருந்தன. கழுவப்பட்ட பாத்திரங்களுடன் அடுப்பு எரிப்பதற்காகக் கொஞ்சம் காய்ந்த குச்சிகளையும் கட்டி அந்தக் கூடையில் வைத்து இருந்தான்.

கந்தனின் மாட்டு மந்தை கிராமத்துக்குத் திரும்பும் வழியில் ஒரு மரத்தில் காகம் ஒன்று அமர்ந்திருந்தது. அது தனது கூட்டைச் சரி செய்வதற்காக குச்சி ஒன்றைத் தேடிக் கொண்டிருந்தது. கந்தனின் தலையில் உள்ள கூடையில் இருந்த குச்சிகளைப் பார்த்த காகம் அதிலிருந்து ஒரு குச்சியை எடுத்து வர எண்ணியது. பறந்து போய் கந்தனின் தலை மீதிருந்த அந்தக் கூடையின் மீது அமர்ந்தது. காகம் லேசான பறவை என்றதால் கந்தனுக்குக் காகம் கூடையின் மீது உட்கார்ந்தது தெரியவில்லை. காகம் அந்தக் கூடையிலிருந்த குச்சி ஒன்றினை வாயால் கவ்விக் கொண்டது. "கந்தனிடம் உள்ளதைப்போல என் கையிலும் குச்சி இருக்கிறதே!" இப்படி எண்ணியதும் காகத்துக்குக் கர்வம் வந்துவிட்டது.

"அடடா! இந்த மாடுகள் என்னால் அல்லவா மேய்க்கப்படுகின்றன. என்னால் தானே இந்த மாடுகள் ஒழுங்காக வீடு திரும்பிக் கொண்டிருக்கின்றன. அது மட்டுமா! இந்த மாடுகளை மேய்ப்பவனையும் சேர்த்து அல்லவா நான் மேய்த்துக் கொண்டு வருகிறேன்". என்று நினைத்துக் கொண்டது. தன்னைப் பற்றி அதிகம் பெருமையாக நினைத்து கொண்டிருந்தபோது தான் வசிக்கும் மரத்தின் அருகில் வந்து விட்டதைக் கண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே "இந்த இடத்தில் என் வேலை முடிந்து விட்டது. இனி மாடுகளை நீ பார்த்துக் கொள்." என்று கந்தனிடம் சொல்லிவிட்டுப் பறந்து சென்று விட்டது. அதனைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாத கந்தன் தன் வழியே நடையைக் கட்டினான்.

அந்தக் காகத்தைப் போலத்தான் சில மனிதர்களும். தம்மைப் பற்றி அதிகம் பேசுவதும் தற்பெருமை கொள்வதுமாகக் காலத்தைக் கழிக்கின்றனர். தங்களால் தான் இந்த உலகமே இயங்குவதாகத் தவறாக எண்ணிக் கொள்ளுகின்றனர். அதனால் தம்மைச் சிறுமைப்படுத்திக் கொள்ளுகின்றனர்.

## வித்தியாசத்தைக் கண்டுபிடியுங்கள்



## வாசகர் ஒருவரின் கடிதம்

அறிந்திரன்!
அறிந்திரா துண்டெனில்
அறிந்திரன் தெரிந்திரன்!
அறிந்திருப்பின் வையகம்
"அறிஞன்" என்றுன்னை
அழைக்குமே!
எதையும் நன்கு அறிந்திடின் - பிறர்க்கு
எடுத்துச் சொல்லலாகுமே!
அவையினர் அனைவரும் - அதனை
அமைதியாகக் கேட்பரே!

அறிந்திரதா திருந்திடில்
ஆரும் திரும்பிப் பார்த்திடார்!
அறிந்திருக்கச் சொல்லுவார்!
"அறிவிலி" என்றே ஏசுவர்!
இருப்பதாயின் அறிந்திரு
இல்லையாயின் போய்விடு
விருப்பமாக எதனையும்
வெறுத்திடாமல் அறிந்திரு!
அறிந்திரா துண்டெனில்
அறிந்திரன் தெரிந்திரன்!

செல்வன் **வி. கேசிகன்**
தரம் 5 A, இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரர் இந்துக் கல்லூரி, திருமலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரடியும் கலைமானும்

**"ஆண் மானைக் கலை என்றும் பெண் மானைப் பிணை என்றும் சொல்லுவர். ஆண்மானுக்குக் கொம்புகள் உண்டு. அதனால் பார்க்க அழகாக இருக்கும். பெண்மானுக்குக் கொம்புகள் கிடையாது. அப்படி இருந்தாலும் வளர்ச்சியற்றுச் சிறியதாக இருக்கும்."**

மான் ஒன்று இரண்டு குட்டிகளுடன் அடர்ந்த காட்டுக்குள் இரை தேடி அலைந்து கொண்டிருந்தது. மாலை நேரம் வந்தது. காட்டுக்குள் இருந்த அந்த மான் தனது குட்டிகளை அழைத்துக் கொண்டு புறப்பட்டது. அப்போது கலை மான் காட்டுக்குள் வழி தவறி விட்டது. காட்டுக்குள் அங்கும் இங்கும் அலைந்து தன் தாயைத் தேடியது. ஆனால் தாயையும், தனது சகோதரியையும் அதனால் கண்டுபிடிக்க முடியவில்லை. காட்டு வழியில் ஓர் ஓரமாக நின்று அழுது கொண்டிருந்தது. அப்போது அந்த வழியால் கரடிக் குட்டி ஒன்று வந்தது.

மான்குட்டியிடம் "எதற்காக அழுகிறாய்?" என்று கேட்டது. அந்தக் கலைமானும் தன் சோகக் கதையைக் கூறியது. பரிதாபம் கொண்ட கரடிக்குட்டி, மான் குட்டியைத் தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றது. இரண்டும் நண்பர்களாக இருந்து சந்தோஷமாகக் காலத்தைக் கழித்து வந்தன. அந்தக் கலைமான் வளர வளர அதன் கொம்புகள் வளர்ந்து கொண்டு வந்தன. பார்ப்பதற்கு மிகவும் அழகாகத் தோன்றியது. அந்தக் கலைமானைப் பார்த்த மற்ற விலங்குகள் அதன் அழகைப் பாராட்டின. அதனால் கலைமானுக்கு கர்வம் உண்டானது. மற்ற விலங்கு களை மதிக்காமல், அவற்றை ஏளன மாகப் பார்க்கத் தொடங்கியது. இந் நாள் வரை தனக்கு அடைக்கலம் கொடுத்து, தன்னுடன் உயிருக்கு உயிராகப் பழகி வந்த கரடியிடமும் தன் அழகின் கர்வத்தைக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்ட ஆரம்பித்தது. "கரடியே! நீ என்னைப் போல் அழகாக இல்லை. உன் முகத்தைப் பார்க்க எனக்குப் பிடிக்கவில்லை. என்னைப் பார்! இயற்கையிலேயே அழகான எனக்கு, இப்போது வளர்ந்துள்ள கொம்புகள் மேலும் அழகு சேர்க்கின்றன. எனவே உன்னை என் நண்பன் என்று சொல்லிக் கொள்ள வெட்கமாக இருக்கிறது. எனக்கு நண்பனாக இருக்க, என்னைப் போல் அழகு படைத்தவரே தகுதியானவர். உனக்கு அந்தத் தகுதி கொஞ்சமும் இல்லை, விலகிப் போய்விடு" என்றது கலைமான்.

இதைக் கேட்ட கரடிக்கு அதிர்ச்சியாக இருந்தது. இருந்தாலும் அதனை வெளியே காட்டிக் கொள்ளாமல் "மானே! உனக்கு உன் கொம்புகள் மிகுந்த அழகுதான். அதை நானும் ஒப்புக்கொள்கிறேன். அது மட்டுமல்லாது, என் நண்பன் மிகவும் அழகானவன் என்பதில் எனக்கும் பெருமை தானே!" என்றது பெருந்தன்மையுடன்.

"உன்னை என் நண்பன் என்று சொல்லிக் கொள்ள எனக்கு வெட்கமாக இருக்கிறது. நான் தனியாக வாழ முடிவு செய்து விட்டேன்." என்று கூறியபடி கலை மான் அங்கிருந்து புறப்பட்டுப் போய்விட்டது. இது நாள் வரை தன்னோடு ஒற்றுமையாக வாழ்ந்த மான், பிரிந்து போவதைக் கண்டு வேதனையில் துடித்தது கரடி. இருப்பினும் மனதைத் தேற்றிக் கொண்டது.

ஒரு நாள் கலைமான், இரை தேடுவதற்காக வெளியில் சென்றது. அப்போது மரம் ஒன்றில் இருந்த சிறுத்தை, கலைமானை வேட்டையாடத் துரத்தியது. சிறுத்தைக்குப் பயந்து தலை தெறிக்க ஓடிய கலைமானின் தலை ஒரு மரத்தின் கிளைகளுக்கு இடையில் வசமாக மாட்டிக் கொண்டது. எவ்வளவு முயன்றும் அதனை வெளியே எடுக்க முடியவில்லை. தனது முழுப் பலத்தினைக் கொண்டு கலைமான் தலையை வெளியே இழுக்க முயன்றபோது அதன் கொம்புகள் முறிந்துவிட்டன. கொம்புகள் ஒடிந்து போனதால் கலை மான் பார்ப்பதற்கு அழகற்றதாகத் தோற்றம் அளித்தது. அழகிழந்த மானைப் பார்த்த மற்ற விலங்குகள் அதனைக் கேலி செய்தன. அப்போது தான் அந்தக் கலைமானுக்கு "உற்ற நண்பன் யார்?" என்றது தெரிய வந்தது. பழைய படி கரடியிடம் சென்றது. தனக்கு நடந்த அனர்த்தத்தைக் கரடிக்குச் சொல்லி அழுதது. நடந்ததைக் கரடி பொறுமையாகக் கேட்டது. அது மானுக்காக வருந்தியது.

'மானே! அழகு என்பது எப்போதும் எம்முடன் இருக்கப் போகிற சொத்தில்லை. வயதாக அது எம்மை விட்டு விலகுவது உறுதி. உனக்குக் கொஞ்சம் விரைவாகப் போய்விட்டது. அவ்வளவுதான்! அதற்காக வருந்தாதே' என்று கரடி கலைமானைத் தேற்றியது.

கரடியின் பெருந்தன்மையைக் கண்டு வெட்கத்தில் தலை குனிந்த கலைமான், அதனிடம் மன்னிப்பு கேட்டது. இருவரும் பழையபடி நண்பர்களாகினர். இருவரும் அன்போடு வாழத் தொடங்கினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பது எல்லாம் நன்மைக்கே

நீதிக்கதை

காட்டு ராஜாவான சிங்கத்தின் குகை வாசலில், ஏகப்பட்ட மிருகங்கள் கூடி நின்றன. அவர் வேட்டையாடச் சென்ற போது, அடிபட்டு, விரல் துண்டாகி விட்டதென்று அறிந்து துக்கம் விசாரிக்கத் தான் காட்டுப் பிரஜைகளான எல்லோரும் கூடியிருந்தனர். ஒவ்வொரும் வரிசையில் நின்று, குகையின் உள்ளே சென்று, சிங்க ராஜாவைப் பார்த்து விட்டுத் திரும்பினர். காலில் பலமான கட்டுடன், கட்டிலில் படுத்துக் கிடந்த சிங்க ராஜாவுக்கு அருகே சிங்கராணி கண்ணீரும் கம்பலையுமாக அமர்ந்து இருந்தார்.

வரிசையாகச் சென்று கொண்டிருந்த மிருகங்கள் இடையே வந்து, புகுந்து கொண்ட குள்ள நரி, சிங்க ராஜாவின் அருகே சென்றதும் "ஊம் நடப்பது எல்லாம் நன்மைக்கே" என்று பெருமூச்சு விட்டது. அதைக் கேட்டதும் சிங்கராஜாவுக்குக் கடுங்கோபம் வந்து விட்டது. எனக்கு விரலே போய் விட்டது. அதைப் பார்த்துவிட்டு, "நடப்பதெல்லாம் நன்மைக்கே," என்று கூறுகிறதே இந்தக் குள்ள நரி "அதைப் பிடித்துக் குகைச் சிறையில் அடையுங்கள்!" எனச் சிங்க ராஜா கட்டளை இட்டார். உடனே சிப்பாய்களான குரங்குகள் பாய்ந்து, நரியைப் பிடித்து இழுத்துச் சென்றன. "ஒவ்வொரு காரியமும் நமது நன்மைக்குத்தான் நடக்கிறது என்ற உண்மையைத்தானே சொன்னேன்" என்று புலம்பியது குள்ள நரி.

சிங்கத்தின் காலிலுள்ள புண் குணமாவதற்கு, மூன்று மாதங்களாயிற்று. காலில் ஒரு விரல் இல்லாததால் சிங்கராஜாவால் கம்பீரமாக நடக்க இயலாமல் போயிற்று. நொண்டி நொண்டி நடந்தது. அதனால் மிருகங்கள் எல்லாம் அவரை "நொண்டி ராஜா" என அழைத்துக் கேலி செய்தன. இப்படிச் சிங்கராஜாவை எல்லாரும் கேலி செய்வதைக் கேட்ட சிங்கராணிக்கு மிகுந்த வருத்தம் உண்டாயிற்று. "என்ன செய்வது? இந்தப் பட்டத்தைச் சூட்டியது யாராக இருக்கலாம்? தெரிந்தால், இளவரசனான சிங்கக்குட்டியிடம் அவருக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்கலாமே!" சிங்கராணி யோசித்துக் கொண்டது. உண்மையில் அந்தப் பெயரைச் சூட்டியது குறும்புக்கார முயல் என்று எவருக்கும் தெரியாது. சிறையில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைபட்டிருந்த குள்ள நரிக்கு சைவ உணவு, அதுவும் ஒரு முறை மட்டுமே கொடுத்தார்கள். மாமிச பட்சணியான குள்ள நரிக்குச் சைவ உணவைக் கண்டாலே குமட்டிக் கொண்டுவரும். "யாரிடம் முறையிடுவது? வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்காமல், வார்த்தையைக் கொட்டி விட்டு, வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டேனே." என எண்ணி வருந்தியது. தற்போது சிங்கராஜா காலை நொண்டிக் கொண்டு நடப்பது வழமை யாயிற்று. ஒரு நாள் வேட்டையாட வெனச் சிங்கராஜா காட்டுக்குள் சென்றார். அங்கு ஒரு இடத்தில் வைக்கப்பட்டிருந்த கம்பிக் கூண்டுக்குள், ஆட்டுக்குட்டி ஒன்று நின்றதைக் கண்டார். ஆவலோடு ஆட்டுக்குட்டியின்மீது பாய்ந்து, கடித்துத் தின்று விட்டார். அப்போது அந்த இரும்புக் கூண்டின் கதவு தானாக மூடிக் கொண்டதைக் கண்டு, திகைத்தார். "மடத்தனமாக கூண்டுக்குள் அகப்பட்டுக் கொண்டோமே!" என்று நினைத்து வேதனைப்பட்டார். ஆத்திரத்தில் கர்ஜனை செய்தார். அப்போது அந்த வழியால் வந்த அரண்மனைக் காவலர்கள் கூண்டில் அடைப்பட்ட சிங்கத்தைக் கண்டனர். தங்கள் வண்டியில் கட்டி இழுத்துச் சென்றனர். "நம் இளவரசர் கேட்டபடி அவர் விளையாடுவதற்கு ஒரு சிங்கம் கிடைத்து விட்டது. இதைப் பார்த்தால் அவர் மிகவும் மகிழ்ச்சியடைவார். இளவரசரின் மகிழ்ச்சியைக் கண்டு மன்னர் நமக்குப் பரிசுகள் கொடுப்பார்", என்றெல்லாம் பேசிக் கொண்டே அரண்மனையை அடைந்தனர். கூண்டிலிருந்த சிங்கத்தை கீழே இறக்கியபோதுதான் அது நொண்டி நொண்டி நடந்ததைக் கண்டனர். அதைக் கண்டு வருந்தியவர்கள், "இது ஊனம் உற்ற சிங்கம். இதனுடன் நம் இளவரசர் விளையாட முடியாது. எனவே, இதைக் காட்டில் கொண்டு போய் விட்டு விடுவதே நல்லது" என்று கூறியபடி சிங்கத்தை மீண்டும் காட்டுக்குள் கொண்டு சென்று விட்டனர். சிங்கத்திற்கு மகிழ்ச்சி பொங்கியது.

"நமது கால் விரல், இல்லா ததால்தான் நம்மை விட்டு விட்டார்கள். "நடப்பது எல்லாம் நன்மைக்கே" என்று அன்றைக்கு நரி சொன்னபோது, ஆத்திரப் பட்டு அதைக் கூண்டில் அடைத்தோம். ஆனால் அது சொன்னது சரியென்று இப்போதுதான் உணர முடிகிறது" என் றெல்லாம் நினைத்தபடி தனது குகைக்குச் சென்ற சிங்கம், தனது குடும்பத்தினரிடம் நடந்ததைச் சொன்னது.

உடனடியாகச் சிங்கத்தின் குடும்பத்தினர் சிப்பாய்க் குரங்குகளை அழைத்தனர். "குள்ள நரியை வெளியில் விட்டு விடுங்கள்" என்று உத்தரவிட்டனர். அதன்படி சிறையை விட்டு, வெளியேவந்த குள்ள நரியை வரவேற்ற சிங்கராஜா, "அறிவுக் கடலே, இன்று முதல் நீர் தான் எனது மந்திரி, நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று அன்று நீங்கள் சொன்னது உண்மையாகி விட்டது. யார் எதைச் சொன்னாலும் அவசரப்படாமல் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதை இப்போது புரிந்து கொண்டேன்." என்று மகிழ்ந்தது.


**நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று நினைத்தால் துன்பம் தரக்கூடிய செயல் எதுவும் இல்லை.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அர்ஜுநாத் சிந்து விநாயகலா பெற்ற கௌரவம்



இந்த ஓவியத்தை வரைந்த கலைஞர் கேரளாவிலுள்ள திரிச் சூரைச் சேர்ந்தவர். 9 ஆம் வகுப்பு மாணவன். அர்ஜுநாத் சிந்து விநாயலா என்பது அவர் பெயர்.

அவர் இதை ஒரு காரணத்தோடுதான் வரைந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார். அர்ஜுநாத்துக்குத் தனது தாயாரின் கடமையுணர்வையும் குடும்ப அக்கறையையும்கண்டபோது ஆச்சரியப்பட்டாராம். ஏனெனில் அவர் தனது தாயார் வீட்டில் சும்மா இருந்ததைப் பார்த்ததில்லை. எப்பொழுதும் பம்பரம் போலச் சுழன்றவாறு வீட்டு வேலைகளைக் கவனிப்பாளாம். எனவே அவர் கண்ட தனது தாயின் அன்றாட வாழ்க்கையைச் சித்தரித்து அதனை ஓவியமாக வரைந்த பின்பு அதைத் தனது ஆசிரியரிடம் காட்டியிருக்கிறார். அந்த ஆசிரியை அந்த ஓவியத்தைக் கேரள மாநில அரசு அலுவலகத்திற்கு அனுப்பினார். அரசு அதனை 2020 - 2021 ஆவணத்திற்கான அட்டைக்குரிய படமாகத் தேர்ந்தெடுத்தது.

கடற்கரைக் காட்சி



நவிஷ்கா பிரதாப்
தரம் 3C, யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோர்களுக்கு,

வணக்கம்.

உங்களை நோக்கி ஒரு வேண்டுதல்

இதுவரை அறிந்திரனின் மூன்று இதழ்கள் உங்கள் குழந்தைகளின் கைகளை வந்தடைந்திருக்கின்றன. தற்போது நாலாவது இதழும் வந்து விட்டது.

நோய்த்தொற்று.. அதனால் ஏற்பட்ட பொருளியல் நெருக்கடி.. அச்சத்தோடு எல்லாவற்றையும் அணுக வேண்டிய சூழ்நிலை. அனைத்திற்கும் மத்தியிலேயே அறிந்திரனின் உருவாக்கப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவ்வாறான தருணத்தில் ஏற்படுகின்ற மன அழுத்தங்களையும், பின்னடைவுகளையும் புறந்தள்ள குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய சிந்தனைகளே எமக்குத் துணை நிற்கின்றன. எனவே இந்த இக்கட்டான சூழ்நிலைகளையும் கடந்து வெளிவருகின்ற அறிந்திரன் எல்லோர் கைகளையும் சென்றடைய வேண்டும். எனவே பிறருக்கு அறிந்திரனை அறிமுகப்படுத்துங்கள். அதுவே அறிந்திரனின் இலட்சியத்தை நிறைவேற்றும் என மனப்பூர்வமாக நம்புகிறோம்.

முன்பின் அறியாத எத்தனையோ நன் நோக்கங்கொண்ட மனிதர்களின் உதவியும், உழைப்பும் அவர்கள் அறிந்திரன்மீது கொண்ட பற்றும் எமது நோக்கத்தைச் சாத்தியமாக்கியுள்ளது.

தான் பார்க்கின்றவைகளை ஓவியங்களாக வரைவதைத் தனது பொழுது போக்காகக் கொண்ட நந்திகாவையும்,தான் ஒரு ஆசிரியராக வேண்டும் என்ற கனவோடு அச்சுவேலிக் கிராமத்தில் இருக்கின்ற விஷாளியையும், எதிர்காலத்தில் தாம் தலைசிறந்த ஓவியர்களாகவும், எழுத்தாளர்களாகவும் வருவோம் என்பதைத் தமது படைப்புகள்மூலம் நிரூபித்திருக்கும் ஆதிரை மற்றும் ஆயிழை சகோதரிகளையும், தன்னை ஒரு கதாசிரியனாக அடையாளங் காட்டும் ச.அயனையும் தன்னை ஒரு சமூக ஆர்வலராகப் பிறருக்கு அறியப்படுத்தி இருக்கும் வி.பவுஜனையும் மற்றும் குழந்தைப் படைப்பாளிகளான ஜெ.அனுஸ்ரன், ஜெ.பிரியதர்சிகா, வ.சஞ்சனா, அ.தத்வார்த்தன், எஸ்.அபிராஜிதா, கே.டிலக்ஷன் என இப்படி, இயல்பமைவில் திறமை மற்றும் அறிவாற்றல் பெற்ற பல குழந்தைகளை அறிந்திரன் உலகுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறான்.

அது மட்டுமல்ல யாழ்.கச்சேரி வளாகத்தில் அறிந்திரனின் அறிமுகத்தின் போது அதனைப் பெற்றுக் கொண்ட ஒரு குழந்தையின் தாயார் நன்றிப் பெருக்கோடு "குழந்தைக்கு வாசிக்கக் கொடுக்க ஒன்றுமே இல்லை. இப்படி ஒன்றிற்காகத்தான் காத்திருந்தோம்: வந்து விட்டது." என்று சொன்னதை நாம் வெறும் புகழ்ச்சிமிக்க வாசகங்களாகக் கருதவில்லை.

காலத்தின் தேவை அறிந்து வெளிவந்திருக்கும் இந்த இதழுக்காகக் காத்திருக்கின்றவர்கள் கரங்களுக்குள் காலந்தவறாமல் தடையின்றி அறிந்திரன் சென்று சேர வேண்டும். அதுவே எமது விருப்பம். அதுவே எமது பிரார்த்தனை.

நன்றி

**அறிவன் வெளியீட்டகம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கான போட்டி – இல.04

# அறிந்திரன்

## கிளறுங்கள் சிந்தனையை




பெயர்……………………………………

முகவரி……………………………………

பெற்றோரின் தொ.பே. இல……………………………………

படிக்கும் பாடசாலை / வகுப்பு ……………………………………

ஆர்வமுள்ள துறை……………………………………

ஒப்பம் (தாய் / தந்தை / பாதுகாவலர் ……………………………………

விடைகள் யாவும் **31.05.2021** முன்பு எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள். சரியான விடைகளுள் மூன்றினைக் குலுக்கல் முறையில் தெரிந்தெடுத்து பரிசாக ரூபா **500/=** பெறுமதியுள்ள சிறுவர் புத்தகங்கள் (மூன்று பேருக்கு) வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலிருந்து கீழ்

1. யாழ்ப்பாண அரசின் கடைசி மன்னன்
2. இது ஒரு விளையாட்டு ( தாச்சி போல)
3. நீர்நிலை பள்ளம்
4. இறைவன் மேல் வைத்த அன்பு
5. தகுதி
9. மிகுந்த
10. காலவடையாளம்
12. மரக்கறி உணவு இப்படியும் அழைப்பர்
14 இராமனின் ஒரு மகன்
15. "ள" வை இப்படிச் சொல்வர்
18. கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் ....

## இடமிருந்து வலம்

1. ஏழு ஸ்வரங்கள்
6. ஓய்வுக்கு இது அவசியம்
7. எமது சிறுவர்களின் பாரம்பரிய விளையாட்டு
8. அமைதி குழம்பி விட்டது
11. திக்கு
13. இடையினங்கள் (உயிர்.மெய்)
16. ஆறிய காயம்
17. தமிழ் எண்கள் 1, 5, 2
18. பெருக்கல் அடையாளம்
19. இணையவழிச் சந்திப்பு சாதனம்
20. முகில்

### கிளறுங்கள் சிந்தனையை – போட்டி இல. 03 விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 செ | ய் | 2 வி | னை | | 3 வா | த் | 4 து |
| வ் | | ல் | 5 ம | டு | ட | 6 வ | ளி |
| 7 வா | னி | லை | 8 எ | து | கை | | க |
| ய் | | | து | 9 ம் | | 10 க | ள் |
| | | 11 மு | ம் | ர | ம | ம் | 12 ஆ |
| 13 இ | 14 பு | 15 க | ற் | ப | 16 க | ம் | ய |
| 17 ட | ம் | 18 மா | | 19 ம் | ட | ப | க |
| ம் | 20 வ | லை | | 21 ப | னை | ஓ | லை |

**கிளறுங்கள் சிந்தனையை - போட்டி இல.2 இல்**
பரிசு பெற்றோர் விபரம்.

### முதலாம் இரண்டாம் இடங்கள்

செல்வி. **அ.நுஷானி** (இலக்கம் 350 கரும்புள்ளியான் நட்டாங்கண்டல் மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்.) செல்வி. **தேவராசா நிஷாந்தினி** (செல்வபுரம் வவுனிக்குளம்). செல்வி. **சு. டனுஷியா** மே.பா திருமதி. **சு.மகேஸ்வரி** LDO பாண்டியன்குளம் நட்டாங்கண்டல் மு.பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் - வகுப்பு 7). செல்வி. **கி. கஜானா** (இல.32 ஐம்பது வீட்டு திட்டம், பாண்டியன்குளம் மு. பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் -வகுப்பு 7)

### மூன்றாம் இடம்

செல்வன். **நா பிரணவன்.** (இல. 117 பாண்டியன்குளம், நட்டா கண்டல், மு/ பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் தரம் 7). செல்வன். சி **துகிஜயன்**, (பன்னாலை தெல்லிப்பழை, யாழ் மகாஜனா கல்லூரி தரம் 6). செல்வன். **ஈஸ்வரன் ஆருடன்**, (இல. 64 கோவில் வாசல் இணுவில் மேற்கு, இணுவில்) செல்வி. **சி. சிவாதிகா** (தொல்புரம் கிழக்கு, தொல்புரம் யாழ்.தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலயம் தரம் 5) செல்வன் **சி.யர்சிகன்** (தொல்புரம் கிழக்கு ,தொல்புரம்.) Shaaruthan 26/34 W B S Boteju Mawatte, (Kalubowila Gr. 5 C/ Isipathana college, Colombo 6.) செல்வி. **றெ பருதிகா** (இல. 70/ 19 ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம், தரம் 6 யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்.)

### ஆறுதல் பரிசு

செல்வி. **அக்ஷயா குமார்** (25/1டெரன்ஸ் அவெனியு, கல்கிசை வகுப்பு 7 - கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி) செல்வன். **நா.தர்ஷன்** (சீமாட்டி குளம், நட்டான் கண்டல் தரம் 7 மு/ பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்) செல்வன் **யு. ஜெக்சன்** (செல்வபுரம், வடக்கு வவுனிக் குளம், வவுனிக் குளம் மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் - தரம் 7) செல்வன் **வை.கவின்** (இல. 56 அருளானந்த வாசா இணுவில் தெற்கு, இணுவில், யாழ் இந்துக் கல்லூரி - தரம் 6) செல்வன். **ல. ஹரிச்சரன்** (காரைக்கால் வீதி இணுவில் கிழக்கு, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) செல்வன். **நேகன் யோகராஜா** 10 - 3/6 37th Lane Wellawatte

அறிந்திரன் அனுப்பும் பரிசுப் பொருட்கள் கிடைத்தவுடன் அதனை எமக்குத் தெரியப்படுத்தினால் நாம் மிகவும் மகிழ்ச்சி அடைவோம். அஞ்சல் அட்டை, மின்னஞ்சல் அல்லது குறுஞ் செய்தி இவற்றின் வாயிலாக தெரியப்படுத்தலாம்.

-அறிவன் அண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நிற்க" STOP என்ற குறியீடு எதற்காக வைக்கப்பட்டிருக்கிறது?




இது ஒரு போக்குவரத்துத் தொடர்புடைய குறியீடு ஆகும். வாகனச் சாரதிகளுக்கு அறிவுறுத்த வேண்டிச் சாலை, சந்திகளில் வைக்கப்பட்டிருக்கும். ஒருவர் தான் செலுத்துகின்ற வாகனத்தை நிறுத்தி, நின்று, முன்னும் பின்னும் அக்கமும் பக்கமும் பார்த்து எதுவித வாகனங்களும் இல்லை என உறுதிப்படுத்திக் கொண்டு வாகனத்தை செலுத்தலாம். இதனை அறிவுறுத்துவதற்காகவே இது போன்ற அறிவுப்புப் பதாதைகளை வைத்திருக்கிறார்கள்.

இவ் அறிவுறுத்தலைப் பின்பற்றாது வாகனத்தைச் செலுத்துவாமானால் சில சந்தர்பங்களில் நாங்கள் செலுத்தும் வாகனம் விபத்துக்குள்ளாகலாம். எனவே தான் இந்த அறிவுறுத்தலை மீறுவோர்கள் தண்டிக்கப்படுகின்றனர். வாகனச் சாரதி ஒருவர் எப்பொழுதும் தன் நலன் கருதியும் தெருவில் செல்லும் பிற வாகனங்கள் நலன் கருதியும் சாலையில் செல்லும் பாதசாரிகளின் நன்மை கருதியும் தெருக்கரையோரங்களில் காணப்படும் இது போன்ற குறியீடுகளையும் அது தொடர்பான அறிவுறுத்தல்களையும் பின்பற்றுவது அவசியம். இது பொதுமக்கள் நலன் கருதிய ஒரு செயற்பாடு ஆகும்.

ATC 1985 கரங்கள் பெரிய பிரித்தானியா

## இச்சஞ்சிகையை மானிய விலையில் கொடுக்க உதவியோர்

P & K Associates Accountants & Tax Consultants UK

New Evergreen Printers

AnnA 1959
ANNA COFFEE


Wellwisher

பூபாலசிங்கம் புத்தகசாலை

Rasika Holdings

Citypak

வெண்பா
Tamil Books Shop

KIRUBAA LEARNERS
கிருபா லேணர்ஸ்

IBC தமிழ்
IBC தமிழ்

Rabeena
Rabeena Foods

ES Printers
Printing Services
ES Printers


கன்பத்தேன் இயற்கை பழச்சாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மே**லே நீங்கள் பார்த்த கொரோனா பற்றிய வர்ண ஓவியத்தை வட மாகாணம் - அச்சுவேலி, தோப்பு, அரசடி வீதி என்ற முகவரியில் வசிக்கும் செல்வி அருள்மோகன் விஷாளி வரைந்து அனுப்பியிருக்கிறார். அவர் அப்பா பெயர் அருளம்பலம் அருள் மோகன். அம்மா பெயர் நிரோஜா.

யா./ அச்சுவேலி ஆரம்பப் பாடசாலையில் கற்று ஆண்டு 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுள்ள அவர் ஆறாம் ஆண்டுக்கான கல்வியை யா/இந்து மகளிர் கல்லூரியில் தொடரவிருக்கிறார். அறிந்திரன் இதழ் 2 இல் "நான் ஒரு ஆசிரியரானால் " என்ற சிறு கட்டுரையை எழுதி அறிந்திரன் வாசகர்களுக்கு அறிமுகமானவர். அதனைப் பலர் பாராட்டினர். இதுவரை அறிந்திரனுக்குப் பல ஆக்கங்களை எழுதி அனுப்பி இருக்கிறார். அவை யாவும் அவ்வப்போது பிரசுரிக்கப்படும்.

தற்போது எம்மைப் பயமுறித்திக் கொண்டிருக்கும் கொரோனா நோய் அவருக்கும் பயத்தினை ஏற்படுத்தி இருக்கிறது. அதனால்தான் முகத்தில் கவசம் (மாஸ்க்) அணிந்த ஒரு மனிதன் கொரோனா நோயைப் பரப்பும் கிருமியை வெறுத்து விரட்டுவதாகக் கற்பனை செய்து அதனை வரைந்திருக்கிறார்.

"இந்த நோயிலிருந்து நம்மை நாமே பாதுகாக்க வேண்டும்" என்ற விடயத்தைச் சமூகத்துக்குத் தனது ஓவியத்தின் மூலம் ஒரு குறியீடாகச் சொல்லி இருக்கின்ற விஷாளி பாராட்டுக்குரியவர்.

அவர் எண்ணப்படி அவர் ஒரு சிறந்த ஆசிரியராக வந்து பலரைக் கற்பித்து உயர்த்திவிடும் ஏணிப் படியாகச் செயலாற்றுவார் என அறிந்திரன் மனப்பூர்வமாக நம்புகிறான். அவருக்கு அறிந்திரனின் வாழ்த்துகள்.

- **அறிவன் அண்ணா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org